IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

SC.NO.160/2022

Deposition of Witness for P.W.15

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.தட்சிணாமூர்த்தி |
| FATHER NAME | - | |
| VILLAGE | - | |
| TALUK | - | |
| OCCUPATION | - | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| AGE | - | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.11.2025.

2, 4, 7 எதிரிகள் ஆஜர். 1, 3, 5, 6 ஆஜர் இல்லை மனு ஏற்பு. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் பணமடங்கி காவல் நிலையத்தில் 2020 ஆம் ஆண்டு பணிபுரிந்தபோது குற்ற எண்.252/2020 வழக்கில் இறந்துபோன கிருஷ்ணன் என்பவரது பிரேதத்தை சடல கூறாய்வு செய்ய காவல் ஆய்வாளர் கடிதத்தை பெற்று வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவரிடம் ஒப்படைத்தேன். சடல கூறாய்வு முடித்த பின்னர் பிரேதத்தை நல்லடக்கம் செய்ய அவரது உறவினரிடம் ஒப்படைத்தேன். சடல கூறாய்வின்போது மருத்துவரால் சேகரிக்கப்பட்ட இரத்தக் கரை படிந்த வெள்ளை நிற அரைக்கை சட்டை, இரத்தக் கரை படிந்த வெள்ளை நிற முண்டா பனியன், சிமெண்ட கலர் பெண்ட், பிரௌன் நிற ஜட்டி, கருப்பு நிற Belt, கருப்பு நிற அரைஞாண் கயிறு ஆகியவற்றை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளரால் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். மேலும், நீதிமன்ற உத்தரவின் பேரில் தடைய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அது தொடர்பாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை-</u> இல்லை என தெரிவிக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 25.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.25 19:40:11 +0530

Additional District Judge(FTC),
Vellore